2025 ஆகஸ்ட் மாதம் 28 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 232/2023

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 – ஆம் தேதி வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – பிரம்மதேவன் |
| தந்தை பெயர்: | சேர்வார்தேவர் (எ) பெரியசாமி தேவர் |
| ஊர்: | சிங்காரப்பேட்டை |
| வட்டம்: | ஊத்தங்கரை |
| மாவட்டம்: | கிருஷ்ணகிரி |
| தொழில்: | கூலி |
| வயது : | 57 |

28.08.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 26.05.1995ம் தேதியிட்டு மொக்கையத்தேவர் வகையறா 1ம் பார்ட்டியாகவும், பெரியசாமி தேவர் வகையறா 2வது பார்ட்டியாகவும், பெரியமுத்துக் கருப்பத்தேவர் மனைவி ஒச்சம்மாள் 3வது பார்ட்டியாகவும், சின்னமுத்துக்கருப்பத்தேவர் வகையறா 4வது பார்ட்டியாகவும் இருந்து 4ம் பிரதிவாதியின் கணவர் சந்திரன் என்பவருக்கு பிறப்பித்துக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.1880/1995 – **வா.சா.ஆ.1** |

| | |
|---|---|
| 2. | 16.12.2009ம் தேதியிட்டு சந்திரன் என்பவரின் பவர் ஏஜென்ட் நிலைமையில் 3ம் பிரதிவாதி செல்வராஜ் என்பவர் 2ம் பிரதிவாதி விஜயலட்சுமி என்பவருக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.10306/2009 – **வா.சா.ஆ.2** |
| 3. | 21.08.2009ம் தேதியிட்டு சந்திரன் 1வது பார்ட்டியாகவும், சர்ச்சில் 2வது பார்ட்டியாகவும் இருந்து எழுதிக்கொண்ட பதிவு கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.6433/2009 – **வா.சா.ஆ.3** |
| 4. | கொடிவழி ஜாபிதா அசல் – **வா.சா.ஆ.4** |
| 5. | 28.04.2023ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் (எண்ணம் 4), அசல் அஞ்சலக இரசீதுகளுடன் – **வா.சா.ஆ.5** |
| 6. | நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை 2, 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் (எண்ணம் 2) அசல் – **வா.சா.ஆ.6** |
| 7. | நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை 1 முதல் 3 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சலக உறைகள் (எண்ணம் 4) அசல் – **வா.சா.ஆ.7** |
| 8. | கொடுவிலார்பட்டி கிராம புல எண்.726/3–க்குரிய புல வரைபட நகல் இணையதள நகல் – **வா.சா.ஆ.8** |
| 9. | 21.12.2023ம் தேதியிட்டு 01.01.1987 முதல் 20.02.2023 வரையிலான காலங்களுக்குரிய வில்லங்கச்சான்று இணையதள நகல் – **வா.சா.ஆ.9** |
| 10. | கொடுவிலார்பட்டி கிராமம், புல எண்.726/3 மற்றும் 726/19–க்குரிய வழிகாட்டி மதிப்பு இணையதள நகல் – **வா.சா.ஆ.10** |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 28.08.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.28 18:40:07 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
28.08.2025.